மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"மானியக் கோரிக்கை எண் 21—மீனளம் என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 8,81,14,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண் 35—நுகர்பொருள் வழங்கல்.

திரு. கே. ஆர். சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றது.

திருவாளர்கள் த. வேணுகோபால், கே. கல்லன் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றனவாகக் கருதப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"மானியக் கோரிக்கை எண் 35—நுகர்பொருள் வழங்கல் என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,96,25,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, திங்கட்கிழமை 27—4—1981 காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.16 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

7. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

364. தென் ஆர்க்காடு மாவட்டத்தில் மரவள்ளி வற்றல், மரவள்ளி மாவு மரவள்ளி மாவுப் பொருள், புகையிலை, தேங்காய் மற்றும் தேங்காய் உற்பத்திப் பொருள்கள், புளி, வெங்காயம், துவரம்பருப்பு ஆகியவற்றைக் கொள்முதல் செய்தல் மற்றும் விற்பனை செய்தலின் மீது கட்டுப்பாடு செலுத்துதலை

அறிவிப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 11-12-1980 ஆம் தேதியிடப் பெற்ற 2357 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

@ 162. கோரிக்கை எண் 21—மீனளம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1981-82 (தமிழ், ஆங்கிலம்).

† 163. கோரிக்கை எண் 35—தமிழ்நாடு உணவு நிலைமை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு (தமிழ், ஆங்கிலம்).

‡ 164. மீனளம் குறித்த செயல்முறைத் திட்டம், 1981-82 (ஆங்கிலம்).

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS